

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.1.2025) தலைமைச் செயலகத்தில், புதிய வடிவமைப்பு மற்றும் மக்களை கவரும் உள்ளடக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு “முற்றம்” இதழினை வெளியிட்டார். இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், முற்றம் இதழின் சிறப்பு ஆலோசகர் ஐயன் கார்த்திகேயன் ஆகியோர் உடன் உள்ளனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.1.2025) தலைமைச் செயலகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிர்வாக மேலாண்மை, நிதி மேலாண்மை உள்ளிட்டவற்றில் சிறப்பாக செயல்படுவதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், உருவாக்கப்பட்டுள்ள “மின்மதி 2.0” கைபேசி செயலியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங் ஆகியோர் உடன் உள்ளனர்.

### மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக ‘மின்மதி 2.0’ கைபேசி செயலி தொடக்கம்!

# புதிய வடிவுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ‘முற்றம்’ இதழ்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஜன. 12-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.1.2025) தலைமைச் செயலகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிர்வாக மேலாண்மை, நிதி மேலாண்மை உள்ளிட்டவற்றில் சிறப்பாக செயல்பட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், உருவாக்கப்பட்டுள்ள “மின்மதி 2.0” கைபேசி செயலியை தொடங்கி வைத்து, புதிய வடிவமைப்பு மற்றும் மக்களை கவரும் உள்ளடக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் இதழினை வெளியிட்டார்.

பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைய வேண்டும் என்பதற்காக 1989ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுவினர் முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலான திராவிட மாடல் அரசினால் ஏற்றம் பெற்று மிகப்பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான அடிப்படைப் பயிற்சிகள் நேரடியாக சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்களின் நிர்வாகத்திறனையும், நிதி மேலாண்மை திறனையும் மேம்படுத்துவதற்காக மின்கற்றல் தள (eLearning platform) அடிப்படையில் “மின்மதி 2.0” கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செயலி மூலமாக நிர்வாக மேலாண்மை, நிதி மேலாண்மை, நிதி உள்ளாக்கம், வாழ்வாதாரம், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், அரசுத் திட்டங்கள் போன்ற தலைப்புகளில் உரிய பயிற்சிகளை கேட்பொலி மற்றும் காணொளி வழியாக வழங்கப்பட உள்ளது. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் நேரடியாக தங்களுடைய கைபேசி மூலம் பல்வேறு தலைப்புகளில் தேவையான தகவல்களைக் காணவும், கற்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சமுதாய வளப் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தவும் இந்த செயலி மூலம் பயிற்சி வழங்கப்பட உள்ளதுடன், தேர்வானவர்களுக்கு மின் சான்றிதழ் (ECertificate) வழங்கும் வகையில் “மின்மதி 2.0” கைபேசி செயலி அமைக்கப்பட்டுள்ளது.

“மின்மதி 2.0” கைபேசி செயலியானது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் தனித்தனியாக செயல்படுத்தப்பட்டு வந்த மென்பொருட்கள் மற்றும் செயலிகள் அனைத்தும் இணைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த மின்னணு தளமாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விபரங்களைத் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தெரிவிக்க முற்றம் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு, 1998ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் மாதந்தோறும் சிறந்த முறையில் வெளியிடப்பட்டு வருகிறது. முதலில் 10,000 பிரதிகளுடன் வெளியிடப்பட்டு வந்த முற்றம் மாத இதழ் தற்போது சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட சந்தாதாரர்களை கொண்டுள்ளது.

சுய உதவிக் குழு மகளிரை மட்டுமே வாசகராகக் கொண்டுள்ள முற்றம் இதழானது, அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் இதழாக வெளியிட வேண்டும் என்ற நோக்கத்தில், முற்றம் இதழை புதிய பொலிவுடனும், சிறந்த வடிவமைப்புடனும், அனைத்துத் தரப்பினரும் விரும்பும் பயனுள்ள செய்திகளை உள்ளடக்கிய இதழாக வெளியிடச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

அதனடிப்படையில் தற்போது புதிய பொலிவுடனும், நேர்த்தியான வடிவமைப்புடனும், பயனுள்ள செய்திகள், மக்களைக் கவரும் உள்ளடக்கம் ஆகியவற்றைக் கொண்ட இதழாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் இதழ் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், முற்றம் இதழின் சிறப்பு ஆலோசகர் ஐயன் கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சட்டப்பேரவைக்கு நேற்று முன்தினம் வருகை தந்த, கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ‘இவன்தான் அந்த SIR’ எனும் வார்த்தைகள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி முழக்கமிட்டு வந்த காட்சி!

# அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

1967-இல் பெரியாரின் வாழ்த்துகளுடன் ஆட்சிப் பொறுப்பேற்று, “இந்த ஆட்சியே பெரியாருக்குக் காணிக்கை” என்றார் பேரறிஞர் அண்ணா.

**பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றியவர் கலைஞர்!**

பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சமபங்கு கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றி, பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிட முனைந்தவரும் அவர்தான். அந்தச் சட்டத்தின்படி அனைத்துச் சாதியினருக்கும் அர்ச்சகர் பணி ஆணை வழங்கி, முள்ளை அகற்றியவர் முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி அவர்கள்.

**பெரியார் எனும் ஆலமரம் மீது உரசிப் பார்க்கும் மண்ணாந்தைகள்!**

தந்தை பெரியாரின் பிறந்தநாளைச் சமூகநீதி நாளாகவும், டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாளைச் சமத்துவ நாளாகவும் கடைப்பிடிக்கிறது, முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

**தந்தை பெரியாரின் கொள்கைகளே இன்றும் தமிழ்நாட்டை வழிநடத்துகின்றன. அதனால்தான் இதனை ‘பெரியார் மண்’ என்று சொல்கிறோம். சில மண்ணாந்தைகளுக்கு இது புரிவதில்லை. பெரியார் என்ன சொன்னார், எப்போது சொன்னார் என்பது பற்றி தெரியாமலும், பெரியார் சொல்லாதவற்றையும் கூட அவர் சொன்னதாக அபாண்டமாக அவதூறு பரப்பியும், யாருக்கோ ஏஜெண்ட்டாக இங்கே அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் தற்குறிகள், தங்கள் சொந்த அரிப்பைத் தீர்த்துக் கொள்வதற்காக பெரியார் என்ற ஆலமரத்தின் மீது உரசிப் பார்க்கின்றன.**

இதற்கும் தொலைநோக்குச் சிந்தனையாளரான பெரியாரே நமக்கு வழிகாட்டுகிறார்.

**மானமற்ற கூட்டத்துடன் மல்லுக்கட்ட வேண்டியதில்லை!**

“மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம். மானமற்ற ஒருவனுடன் போராடுவது கஷ்டமான காரியம்” என்று 1936-ஆம் ஆண்டிலேயே ‘குடிஅரசு’ ஏட்டில் பெரியார் எழுதியிருக்கிறார். அவர் சொல்லியுள்ளபடி, மானமற்ற கூட்டத்துடன் நாம் மல்லுக்கட்ட வேண்டியதில்லை. மானமும் அறிவும் உள்ளவர்கள் பெரியாரை இழிவு செய்ய மாட்டார்கள். பெரியார், தான் வாழும் காலத்திலேயே பல எதிர்ப்புகளை நேரடியாக எதிர்கொண்டு, இலட்சியப் போராட்டத்தில் வெற்றி கண்டவர். தன் மீதான அவதூறுகளை தன் கொள்கைத் தடியால் அடித்து நொறுக்கி, சமுதாயத்திற்கு விடியலைத் தந்தவர். அறிவிலிகளின் அவதூறுகளால் அவர் புகழை ஒருபோதும் மறைக்க முடியாது.

தந்தை பெரியார் புகழை நாம் என்றென்றும் போற்றுவோம்! அவர் மீது அவதூறு பரப்பி விளம்பரம் தேட நினைக்கும் இழிவான - மலிவான அரசியல் போர்வழிகளைப் புறக்கணிப்போம்! எதையாவது செய்து, தமிழ்நாட்டின் அமைதியைக் குலைக்கலாமா என நினைப்பார்களேயானால், சட்டம் தன் கடமையை நிச்சயம் செய்யும்!

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில்தான் நிதி ஒதுக்கப்பட்டது!

# மயிலாடுதுறை புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

**சென்னை, ஜன. 12-**

**சட்டப்பேரவையில் மயிலாடுதுறை தொகுதி காங்கிரஸ் உறுப்பினர் எஸ். ராஜ்குமார் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எ.வ. வேலு அளித்த பதிலும் வருமாறு:**

**எஸ்.ராஜகுமார்:** *எனது மயிலாடுதுறை தொகுதியிலே, கடந்த 2011 ஆம் ஆண்டு, கலைஞர் ஆட்சியிலே, புறவழிச் சாலை அமைப்பதற்கான திட்டம் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது. அதற்கான நில ஆர்ஜிதப் பணிகள் தற்போதுதான் 14 ஆண்டுகளுக்குப் பிறகு, அமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.*

*அதில் முதற்கட்டமாக 11 கி.மீ. சாலை அமைப்பதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கான பணிகள் இந்த ஆண்டு திட்டத்திலேயே துவங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா?*

**எ.வ. வேலு:** *மயிலாடுதுறை புறவழிச் சாலை என்பது ஏறத்தாழ 11 கி.மீ. நீளம் கொண்ட புறவழிச் சாலை யாகும். கும்ப கோணம், சீர்காழி புறவழிச் சாலை ஆனைமேலதிகாரம் தொடங்கி மயிலாடுதுறை, திருவாரூர் சாலை அகர கீரங்குடியை இணைக் கிற ஒரு சாலையாக அமைந்திருக்கிறது இந்த சாலை.*

*இந்தச் சாலையில் சுமார் 12 கிராமங்கள் உள்ளடங்கியிருக்கிறது.*

*இந்தச் சாலை அமைப்பதற்கு நிலம் எடுப்பதற்காக ரூ.57 கோடி, 4.10.2001ல் திராவிட மாடல் ஆட்சியில் தான் நிதி ஒதுக்கப்பட்டது.*

*அந்த நிதி ஒதுக்கப்பட்டு நபார்டு மற்றும் கிராமச் சாலை அளவிலே அந்த பணத்தை நாங்கள் செலுத்தியிருக்கிறோம். நிலம் என்று எடுத்துக்கொண்டால், தனியாருக்குச் சொந்தமான நிலம் 48.52 ஹெக்டேரும், அரசு புறம்போக்கு நிலம் 1.62 ஹெக்டேரும் தேவைப்படுகிறது.*

*ஆகமொத்தம் 50.14 ஹெக்டேர் நிலங்கள் தேவைப்படுகின்றன.*

*எனவே, இந்தப் பணிகளில் 7 கிராமங்களுக்கு இறுதி தீர்ப்பாணை வழங்கப்பட்டுவிட்டன.*

*ஆணைமேலகரம், வெள்ளாளர் அகரம், திருஇந்தளூர் ஆகிய கிராம நிலங்கள் நபார்டு கிராம சாலையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 5 கிராமங்களிலும் நிலம் எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தப் பணிக்கு நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தவுடனேயே திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வரும்.*

*இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு பதிலளித்தார்.*

# ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல்!

## வேட்பு மனுத் தாக்கல் தொடங்கியது!

*ஈரோடு, ஜன. 12 -*

*ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5 ஆம் தேதி நடைபெறுகிறது.*

*இந்நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று தொடங்கியது. வரும் 13 மற்றும் 17 ஆம் தேதிகளில் வேட்பு மனுத்தாக்கல் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*வேட்பு மனுக்கள் மீது வரும் 18 ஆம் தேதி பரிசீலனையும், வேட்பு மனுக்களை திரும்பப் பெற கடைசி நாள் ஜனவரி 20 ஆம் தேதி கடைசி நாளாகும்.*

*ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் வெளியே 100 மீட்டர் முன்பு எல்லை கோடு போடப்பட்டுள்ளது. மாநகராட்சி வளாகம், தேர்தல் நடத்தும் அலுவலர் அறை என 13 இடங்களில் சிசிடிவி கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது.*

*வேட்பாளர்கள் வேட்பு மனு சரிபார்க்க வசதியாக டேபிள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. வேட்பு மனுத்தாக்கலுக்கு செய்யப்பட்டுள்ள அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், கரூர் மாவட்டம், குளித்தலை சட்டமன்ற தொகுதி ஆர்.டி.மலையில், ரூ. 22 லட்சம் மதிப்பில், ஜல்லிக்கட்டு வாடிவாசல் கட்டிடத்தை மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.